## நவம்பர் – 07 – செவ்வாய்

**“அழைக்கப் பெற்றவர்களில் எவரும் என்னுடைய விருந்தைச் சுவைக்கப் போவதில்லை என உறுதியாக உமக்குச் சொல்லுகின்றேன்.” லூக்15: 24**

### முதல் வாசகம் : உரோமையர் 12 : 5 - 16

சகோதர சகோதரிகளே! நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம் ஒருவருக் கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம். ஆயினும், நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடை களைப் பெற்றுள்ளோம். இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்க மூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும். உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக! தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக்கொள்ளுங்கள். உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள் பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள். விடா முயற்சியோடும் ஆர்வம் மிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள். எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள் துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள் இறைவேண்டலில் நிலைத்திருங்கள். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிட முள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் விருந்தோம்பலில் கருத்தாய் இருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள் ஆம், ஆசி கூறுங்கள் சபிக்க வேண்டாம். மகிழ்வாரோடு மகிழுங்கள் அழுவாரோடு அழுங்கள். நீங்கள் ஒருமனத்தவராய் இருங்கள் உயர்வுமனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களையே அறிவாளிகளெனக் கருதிப் பெருமிதம் கொள்ள வேண்டாம்.

**பதில்பாடல் :** என் நெஞ்சம் அமைதிபெற உம் திருமுன்
வைத்துக் காத்தருளும்

### நற்செய்தி : லூக்கா 14 : 15 - 24

அக்காலத்தில் இயேசுவோடு பந்தியில் அமர்ந்தவர்களுள் ஒருவர் இவற்றைக் கேட்டு அவரிடம், ”இறையாட்சி விருந்தில் பங்கு பெறுவோர் பேறுபெற்றோர்” என்றார். இயேசு அவரிடம் கூறியது ”ஒருவர் பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து பலரை அழைத்தார். விருந்து நேரம் வரவே அவர் அழைப்புப் பெற்றவர்களிடம் தம் பணியாளரை அனுப்பி, ”வாருங்கள், எல்லாம் ஏற்கெனவே ஏற்பாடு செய்தாகி விட்டது” என்று சொன்னார். அவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராய்ச் சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கினர். முதலில் ஒருவர், ”வயல் ஒன்று வாங்கியிருக்கிறேன் அதை நான் கட்டாயம் போய்ப் பார்க்க வேண்டும். என்னை மன்னிக்க வேண்டுகிறேன்” என்றார். ”நான் ஐந்து ஏர் மாடுகள் வாங்கியிருக்கிறேன் அவற்றை ஓட்டிப்பார்க்கப் போகிறேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன்” என்றார் வேறொருவர். ”எனக்கு இப்போது தான் திருமணம் ஆயிற்று ஆகையால் என்னால் வர முடியாது” என்றார் மற்றொருவர். பணியாளர் திரும்பி வந்து இவற்றைத் தம் தலைவருக்கு அறிவித்தார். வீட்டு உரிமையாளர் சினமுற்றுத் தம் பணியாளரிடம், ”நீர் நகரின் வீதிகளுக்கும் சந்துகளுக்கும் விரைந்து சென்று ஏழையர், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் ஆகியோரை இங்கே கூட்டிவாரும்” என்றார். பின்பு பணியாளர், ”தலைவரே, நீர் பணித்தபடி செய்தாயிற்று இன்னும் இடமிருக்கிறது” என்றார். தலைவர் தம் பணியாளரை நோக்கி, ”நீர் வழியோரங்களிலும் நடைபாதைகளிலும் போய், எனது வீடு நிரம்பும் அளவுக்கு மக்களை வற்புறுத்திக் கூட்டிவாரும். அழைக்கப் பெற்றவர்களுள் எவரும் என்னுடைய விருந்தைச் சுவைக்கப் போவதில்லை என உமக்குச் சொல்கிறேன்” என்றார்.”

**தியானம் :** இறையாட்சி விருந்தில் பங்குபெறுவதென்பது இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் அவரவர் அழைப்புக்கேற்ப வாழ்ந்த வாழ்க்கைக்குக் கடவுள் தரும் சன்மானமாகும். நம் அன்றாட வாழ்க்கையில் பலவிதமான அழைத்தல்களைப் பெறுகின்றோம். நம் குடும்பத்தாரிடமிருந்தும், உறவினரிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும், பல தடவைகளில் அரசியல் வாதிகளிடமிருந்தும் அழைத்தல்களைப் பெறுகின்றோம். அவை கொண்டாட்டங்களாக இருக்கலாம், துயர்பகிர்தலாக இருக்கலாம், ஆலோசனைக் கூட்டங்களாக இருக்கலாம், பிரசாரக் கூட்டங்களாகக் கூட இருக்கலாம். இவைகளில் எவை நமக்குத் தேவையானவை, முக்கியமானவை அல்லது கடமை என்பதை நாமே முடிவுசெய்து தெரிந்தெடுத்துக் கொள்கின்றோம். ஆனால், நாம் எவற்றில் கலந்துகொண்டு அந்தந்த அழைப்பிற்கேற்ப நம் பங்களிப்பைச் செய்கின்றோமோ அப்பொழுதுதான் அந்த அழைப்பின் நோக்கம் முழுமைபெறுகின்றது. அவ்வாறே ‘கடவுள் என்னை அழைத்திருக்கின்றார்’ அல்லது ‘கடவுள் என்னைத் தெரிந்தெடுத்திருக்கின்றார்’ என்று நாம் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் போதெல்லாம்: பதினொரு அப்போஸ்தலர்களோடு பன்னிரண்டாவதாக யூதாசையும் இயேசுவே அழைத்தார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எப்போதெல்லாம் நமது செயற்பாடுகள் நம் அழைத்தலுக்கு அமைவானதாக இருக்கவில்லையோ அப்போது அந்த அழைத்தல் காலாவதியாகிவிடுகின்றது என்பதை நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு நினைவூட்டி நிற்கின்றன. வழிகாட்டிகளா? கற்றுக்கொடுத்தலா? தொண்டாற்றலா? எவையாயினும் கடவுளின் அழைப்புக்கு உகந்தனவாக அமைவனவாக!